குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 147/2022

அ.சா. **1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.விஜய் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பூங்கன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 20 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 06.02.2024.**

**(**எதிரி ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

நான் பாகலூரில் குடியிருந்து கட்டிட காரை வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்தவர் எனது தந்தையாவார். என் தந்தை மாலூர் ரோட்டில் உள்ள ஜெயின் பண்ணையில் காரை வேலை செய்துவந்தார். விபத்து நடந்த தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 08.00 மணியளவில் எனது தந்தை ஜெயின் பண்ணைக்கு வரும் போது இரு சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக எனது தாய் மாமா சுரேஸ் தகவல் சொன்னார். விபத்து நடந்த பின்ப எனது தந்தையை சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோதுதான் பார்த்தேன். அங்கே சிகிச்சையில் ஒரு வாரம் இருந்து சிகிச்சை பலனில்லாமல் இறந்துவிட்டார். மேற்படி விபத்து குறித்து பாகலூர்

காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(**மேற்படி புகார் மனு அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடுசெய்யப்படுகிறது**).**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**1)** நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 6 வரையிலான நபர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். வழக்கு விபத்து சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லையென்றால் சரிதான். இவ்வழக்கில் விபத்து சம்பவத்தினை நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சி யாரும் இல்லையென்றால் சரியல்ல. வழக்கு விபத்து சமயத்தின்போது எனது தந்தை தனியாகத்தான் வாகனத்தில் சென்றிருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை கார வேலைத் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். வேலை முடித்து வரும்போது அவ்வப்போது எனது தந்தை மது அருந்திவிட்டு வீட்டிற்கு வருவார் என்றால் சரிதான்.

2) அவ்வாறு வழக்கு விபத்து சமயத்தில் எனது தந்தை மது அருந்தியிருந்தார் என்றாலும், அப்போதுதான் இவ்வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்றாலும் சரிதான். பாகலுர்-மாலூர் சாலையை கடக்க எனது தந்தை முயற்சித்தபோதுதான் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்றால் சரிதான். எனது தந்தையின் உயிர்க்காப்பீட்டுத் தொகை பெறுவதற்கு வேண்டி மாண்புமிகு கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் மனு செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது தந்தையின் உயிர்க்காப்பீட்டுத் தொகை பெறுவதற்க்காகத்தான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 -புகார் மனுவில் என்ன விவரம் எழுதியுள்ளது என்று எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரியின் அஜாக்கிரதையால் வழக்கு விபத்துச் சம்பவம் நடைபெறவில்லையென்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 147/2022

அ.சா. **2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.சுரேஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.வேலு |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 35 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **06.02.2024.**

**(**எதிரி ஆஜர்**)**

<u>முதல் விசாரணை :</u>

1) நான் பாகலூரில் குடியிருந்து கட்டிட கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்தவர் எனது தாய் மாமன் ஆவார். கடந்த 14.04.2021 ம் வருடம் இரவு 08.00 – 08.30 மணியளவில் ஜெயின் பண்ணையில் சம்பளம் வாங்கிக்கொண்டு நானும் வழக்கு விபத்துச் சம்பவத்தில் இறந்துபோன எனது தாய்மாமாவும் மேல்சூடாபுரம் அருகே நடந்துவந்தபோது எங்களுக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் மேற்படி பூங்கன் மீது மோதியதில் அவர் கீழே விழுந்து தலையில் மற்றும் வலது காலில் அடிபட்டது. பிறகு உடனே நான் அவரை ஒசூர் அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துவந்தேன். ஒசூர் அரசுமருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு வேண்டி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். பின்பு அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். அங்கே மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக

என்னை காவல் துறையினர் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு விபத்து சம்பவம் தொடர்பாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். வழக்கு விபத்து சம்பவம் நடந்து 14 நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். புகார் அளித்த அன்றைய தினம்தான் காவல் துறையினர் என்னை விசாரித்தனர் என்றால் சரிதான், அதற்கு பின்பு அவர்கள் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்து வாக்குமூலம் பெறவில்லையென்றால் சரிதான்.

2) இரவு 08.30 மணியளவில்தான் வழக்கு விபத்துச் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். வழக்கு விபத்துச் சம்பவத்தில் இறந்துபோன நபருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்தது என்றால் சரிதான். பாகலூர்-மாலூர் சாலையை திரு.பூங்கன் கடக்க முயற்சித்தபோதுதான் வழக்கு விபத்துச் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். வழக்கு விபத்து சம்பவம் நடந்த இடத்தில் மின் விளக்குகள் ஏதும் இல்லையென்றால் சரிதான். நானும் திரு.பூங்கனும் இருட்டாக இருந்த சம்பவ இடத்தில் எங்களித்தில் கையில் ஏதும் மின் விளக்குகள் வைத்துககொள்ளாமல் சாலையைக் கடக்க முற்பட்ட காரணத்தினால்தான் வழக்கு விபத்து சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. நானும் எனது மாமா திரு.பூங்கனும் வழக்கு விபத்து சமயத்தில் மது அருந்தியிருந்தோம் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஒசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 147/2022

அ.சா. **3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி.சசிகலா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சுரேஷ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 29 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 06.02.2024.**

**(**எதிரி ஆஜர்**)**

<u>முதல் விசாரணை :</u>

1) நான் பாகலூரில் குடியிருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்தவர் எனது சித்தப்பா ஆவார். வழக்கு விபத்து சம்பந்தமாக எனது கணவர் அ.சா.2 திரு.சுரேஷ் தகவல் தெரிவத்தார். கடந்த 14.04.2021ம் வருடம் இரவு 08.00 – 08.30 மணியளவில் ஜெயின் பண்ணையில் சம்பளம் வாங்கிக்கொண்டு அ.சா.2 திரு.சுரேசும் வழக்கு விபத்துச் சம்பவத்தில் இறந்துபோன எனது சித்தப்பாவும் மேல்சூடாபுரம் அருகே நடந்துவந்ததாகவும் அப்போது வழக்கு விபத்து சம்பவம் நடந்ததாக எனக்கு தகவல் தெரிவித்தார். மேற்படி தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தேன். எனது சித்தப்பா திரு.பூங்கனுக்கு தலையில் அடிபட்டிருந்தது. அவரை ஒசூர் அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துசென்றார்கள். ஒசூர் அரசுமருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு வேண்டி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு

அனுப்பிவைத்தார்கள். பின்பு அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். அங்கே மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) வழக்கு விபத்துச் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லையென்றால் சரிதான். ஆகவே வழக்கு விபத்துச் சம்பவமானது யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 147/2022

அ.சா. **4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி.மீனா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.முருகன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 23 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 06.02.2024.**

**(**எதிரி ஆஜர்**)**

<u>முதல் விசாரணை **:**</u>

1) நான் பாகலூரில் குடியிருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்தவர் எனது சித்தப்பா ஆவார். வழக்கு விபத்து சம்பந்தமாக அ.சா.2 திரு.சுரேஷ் தகவல் தெரிவித்தார். கடந்த 14.04.2021ம் வருடம் இரவு 08.00 – 08.30 மணியளவில் ஜெயின் பண்ணையில் சம்பளம் வாங்கிக்கொண்டு அ.சா.2 திரு.சுரேசும் வழக்கு விபத்துச் சம்பவத்தில் இறந்துபோன எனது சித்தப்பாவும் மேல்சூடாபுரம் அருகே நடந்துவந்ததாகவும் அப்போது வழக்கு விபத்து சம்பவம் நடந்ததாக எனக்கு தகவல் தெரிவித்தார். மேற்படி தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தேன். எனது சித்தப்பா திரு.பூங்கனுக்கு தலையில் அடிபட்டிருந்தது. அவரை ஒசூர் அரசு மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துசென்றார்கள். ஒசூர் அரசுமருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு வேண்டி

கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். பின்பு அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். அங்கே மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) வழக்கு விபத்துச் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லையென்றால் சரிதான். ஆகவே வழக்கு விபத்துச் சம்பவமானது யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சுருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்
(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 147/2022

அ.சா. **5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.பழனி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.தர்மலிங்கம் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 67 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 06.02.2024.**
**(**எதிரி ஆஜர்**)**

<u>முதல் விசாரணை :</u>

1) நான் பாகலூரில் குடியிருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்தவர் எனது சித்தப்பா மகன் ஆவார். வழக்கு விபத்து சம்பந்தமாக அ.சா.2 திரு.சுரேஷ் தகவல் தெரிவித்தார். கடந்த 14.04.2021ம் வருடம் இரவு 08.00 – 08.30 மணியளவில் ஜெயின் பண்ணையில் சம்பளம் வாங்கிக்கொண்டு அ.சா.2 திரு.சுரேசும் வழக்கு விபத்துச் சம்பவத்தில் இறந்துபோன எனது சித்தப்பாவும் மேல்சூடாபுரம் அருகே நடந்துவந்ததாகவும் அப்போது வழக்கு விபத்து சம்பவம் நடந்ததாக எனக்கு தகவல் தெரிவித்தார். மேற்படி தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தேன். எனது சித்தப்பா திரு.பூங்கனுக்கு தலையில் அடிபட்டிருந்தது. அவரை ஒசூர் அரசு

மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துசென்றார்கள். ஒசூர் அரசுமருத்துவமனையில் மேல் சிகிச்சைக்கு வேண்டி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். பின்பு அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். அங்கே மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார். 14.04.2021ம் தேதி காலை 09.30 மணியளவில் பாகலூர் காவல் நிலைய போலிசார் விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னுடன் சேர்ந்து திரு.சசிக்குமார் என்பவரும் மேற்படி பார்வை மகஜரில் கையெழுத்திட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் (மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). இந்த வழக்கு சம்பந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு தமிழ் மொழியில் எழுதப்படிக்கத் தெரியாது என்றால் சரிதான். ஆகவே என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது என்றால் சரிதான். காவல் துறையினர் காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்து தயார் செய்த ஆவணத்தில்தான் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.